நற்றமிழின்

# 11 வணிகவியல்

# வினா வங்கி 2022

Natramil Publication

36/34, Uthirappan Kadu,

Manianoor Post,

Salem – 10

Cell : 9488270034, 8667445461

Let's Make Education Easy

Prepared by G.Prakash.M.Com.M.Phil.B.Ed.D.Ted.9488270034

## நற்றமிழ் மாதிரி வினாத்தாள் – 1

**பாடம் – கணக்குப்பதிவியல் வகுப்பு – 12**

**காலம் – 3 மணி நேரம் மதிப்பெண் – 90**

### பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 20x1=20

1. **பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு ________ என்று பெயர்**
அ. அங்காடி ஆ. சந்தை இ. நாளங்காடி ஈ. அல்லங்காடி

2. **மருத்துவர் தொழில் என்பது ___________**
அ. வேலை வாய்ப்பு ஆ. தொழில்
இ. சிறப்புத் தொழில் ஈ. தனியார் வணிகம்

3. **கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?**
அ. தனியாள் வணிகம் ஆ. கூட்டாண்மை இ. கூட்டுறவுச் சங்கம் ஈ.நிறுமம்

4. **கூட்டாண்மை உண்டாக்கப்படுவது**
அ. ஒப்பந்தத்தால் ஆ. கூட்டாளிகளிடையே உறவு
இ. அரசின் வழிகாட்டல் ஈ. நட்பின் அடிப்படையில்

5. **நிறுமச் சட்டத்தின் அட்டவணை -அ (Table A) என்பது**
அ. நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி ஆ. இருப்பு நிலைக்குறிப்பின் மாதிரிப் படிவம்
இ. நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி ஈ. நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

6. **பல நாடுகளில் இயங்கும் நிறுவனங்கள் ஒரு நாட்டில் இருந்து நிர்வகிக்கப் படுகின்றன.இதனை ----நிறுவனங்கள் எனலாம்.**
அ. அரசு நிறுவனங்கள் ஆ. பன்னாட்டு நிறுவனங்கள்
இ. தனியார் நிறுவனங்கள் ஈ. இணை நிறுவனங்கள்

7. **அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு ------க்கு குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.**
அ. 75% ஆ. 60% இ. 95% ஈ.51%

8. **கீழ்க்கண்டவற்றில் எது தொழிற்துறை வங்கி அல்ல?**
அ. ICICI ஆ. HSBC இ.SIDBI ஈ. IDBI

9. **RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?**
அ. எவ்வளவு தொகை வேண்டுமானாலும் ஆ. 50,000
இ. 2 இலட்சம் ஈ. 5 லட்சம்

10. **-- ஒரு சரக்கேற்றி மூலம் பொருட்களைப் பெற்றுக் கொள்வதை ஏற்றுக் கொள்வதற்கான ஆவணம்**
அ. வழிச்சீட்டு ஆ. சரக்குக் குறிப்பு
இ. கப்பல் வாடகை ஒப்பந்தம் ஈ. ஒப்பந்த இரசீது

11. **பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை**
அ. உற்பத்தி மேம்பாடு ஆ. செலவுகளை குறைத்தல்
இ. இலாபம் ஈட்டுதல் ஈ. பண்டகக்காப்பு

12. **நெறிமுறைகளுக்கான தேவைகள்**
அ. உயர்மட்ட மேலாண்மை ஆ. நடுத்தர அளவிலான மேலாளர்கள்
இ. மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள் ஈ. மேற்கண்ட அனைத்தும் விடை :

13. **உட்புற நிதி மூலத்திற்கு எடுத்துக்காட்டு -------**
அ. கடனாளிகளிடமிருந்து பெறப்படும் தொகை
ஆ. வணிக வங்கி கடன்
இ. பங்கு வெளியீட்டின் மூலம் பெறப்படும் தொகை
ஈ. தொழில் நிறுவனத்திற்குள் திரட்டப்படும் நிதி

Prepared by G.Prakash.M.Com.M.Phil.B.Ed.D.Ted.9488270034

14. **---- என்பது நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியை பெறுவதற்காகவே வெளியிடப்படும் ஒரு சிறப்பு வகை பத்திரமாகும்.**
அ. அரசு பத்திரங்கள் ஆ.அந்நிய செலாவணி மாற்றுப்பத்திரம்
இ. பெரு நிறுவன பத்திரங்கள் ஈ. உலகளாவிய வைப்பு இரசீது

15. **உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது-----**
அ. வியாபாரம் ஆ. தொழிற்சாலை இ.வணிகம் ஈ. வர்த்தகம்

16. **வாங்குபவரையும், விற்பவரையும் ஒருங்கிணைக்கும் பணியினை மேற்கொள்வர் -----**
அ. தரகர் ஆ. கழிவு முகவர் இ. விற்பனை முகவர் ஈ. இருப்பு வைத்திருப்பவர்

17. **சரக்கு இறக்குமதி செய்யப்பட்டு மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ------- எனப்படும்**
அ. இறக்குமதி ஆ. ஏற்றுமதி
இ. மறு ஏற்றுமதி வியாபாரம் ஈ. பன்னாட்டு வியாபாரம்

18. **உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்ட நாள்**
அ. 1.1.1996 ஆ. 1.1.1997 இ. 1.1.1995 ஈ. 1.1.1994

19. **இளவருடன் செய்யும் ஒப்பந்தம்**
அ. செல்தகு ஒப்பந்தம் ஆ. செல்லாத ஒப்பந்தம்
இ. தவிர்தகு ஒப்பந்தம் ஈ. மற்றொரு தரப்பினரின்விருப்பத்தின் பேரில

20. **கணக்கீட்டு ஆண்டு என்பது**
அ. ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை ஆ. மார்ச் 1 முதல் பிப்ரவரி 28 வரை
இ. சூலை 1 முதல் சூன் 30 வரை ஈ. சனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை

## பகுதி – ஆ 7x2=14

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30 கட்டாய வினா**

21. பண்ட மாற்றுமுறை என்றால் என்ன?
22. தனியாள் வணிகர் என்று அழைக்கப்படுபவர் யார்?
23. கணக்கீட்டு ஆண்டு என்றால் என்ன?
24. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன ?
25. மைய வங்கி பற்றிச் சுருக்கமாக விளக்குக.
26. மருத்துவக் காப்பீடு என்றால் என்ன?
27. கடன் பத்திரங்கள் பற்றிக் குறிப்பு வரைக.
28. மறு ஏற்றுமதி என்பதன் பொருள் யாது?
29. மடங்குக் கடையின் பொருள் யாது?
30. நாணய உறுதிக் கடிதம் என்றால் என்ன ?

## பகுதி – இ 7x3=21

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40 கட்டாய வினா**

31. மருவூர்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் விளக்குக.
32. தனியாள் வணிகத்திற்கு சில உதாரணங்களை கூறு.
33. அரசு நிறுமம் என்றால் என்ன?
34. தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் - விளக்குக. (NEFT)
35. குளிர் சாதன பண்டகக் காப்பு என்றால் என்ன?
36. அடகு கடன் என்றால் என்ன ?
37. உடன்படிக்கை என்றால் என்ன?

38. ஐவகை வருமானத் தலைப்புகளை வரிசைப்படுத்துக.

39. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் 3)

40. பன்னாட்டு வியாபாரத்தின் வகைகள் யாவை ? ஒவ்வொன்றிற்கும் எடுத்துகாட்டு தருக.

**பகுதி – ஈ**

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 7x5=35

41அ. பண்டைய தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம் பற்றி விளக்குக. (அல்லது)

ஆ. நேரடி வரியையும் மறைமுக வரியையும் வேறுபடுத்துக. (ஏதேனும் 5)

42அ. தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை? (அல்லது)

ஆ. உலக வரத்தக அமைப்பின் நோக்கங்கள் யாவை ?

43அ. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது? ( அல்லது )

ஆ. உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை?

44அ. கூட்டுறவுச் சங்கத்தின் வகைகளைக் கூறுக. (ஏதேனும் 5) (அல்லது)

ஆ. தொழில், சிறப்பு தொழில் மற்றும் வேலை வாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5)

45அ. இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக. (ஏதேனும் 5 ) (அ)

ஆ. சில்லறை வியாபாரிகளின் பணிகள் யாவை? (ஏதேனும் 5)

46அ. பண்டகக் காப்பகத்தின் நன்மைகளை விவரி .(ஏதேனும் 5) (அல்லது)

ஆ. பன்னாட்டு வணிகத்தின் தீமைகளை விவரி. (ஏதேனும் 5)

47அ. காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி? (ஏதேனும் 5) (அல்லது)

ஆ. ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பம்சங்களைத் தெளிவுபடுத்துக.

★★★★★★★★★★★★**வாழ்த்துகள்** ★★★★★★★★★★★



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

## நற்றமிழ் மாதிரி வினாத்தாள் – 2

**பாடம் – கணக்குப்பதிவியல் வகுப்பு – 12**

**காலம் – 3 மணி நேரம் மதிப்பெண் – 90**

### பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20x1=20**

1. **_______முதன் முதலில் சுல்தானாக இருந்தார். அடர்ந்த வனப்பகுதிகளில் பாதை உருவாக்கி வியாபாரம் செய்ய வழி வகுத்தார்.**
அ. பால்பன் ஆ. வாஸ்கோடகாமா இ. அக்பர் ஈ. அலாவுதீன் கில்ஜி

2. **தொழிலின் முதன்மைக் குறிக்கோள் __________**
அ. இலாபம் ஈட்டுதல் ஆ. இலாபம் ஈட்டாமல் இருத்தல்
இ. சிறப்புத் தேர்ச்சி ஈ. மேற்கூறிய எதுவுமில்லை

3. **கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?**
அ. தனியாள் வணிகம் ஆ. கூட்டாண்மை இ. கூட்டுறவுச் சங்கம் ஈ.நிறுமம்

4. **GST யின் விரிவாக்கம்**
அ. சரக்கு மற்றும் அளிப்பு வரி ஆ. அரசு விற்பனை வரி
இ. சரக்கு மற்றும் சேவை வரி ஈ. பொது விற்பனை வரி

5. **கூட்டாண்மை உண்டாக்கப்படுவது**
அ. ஒப்பந்தத்தால் ஆ. கூட்டாளிகளிடையே உறவு
இ. அரசின் வழிகாட்டல் ஈ. நட்பின் அடிப்படையில்

6. **கூட்டுறவு அமைப்பில் உறுப்பினர்கள்**
அ. யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆக முடியாது ஆ. தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்
இ. யார் வேண்டுமானாலும் இருக்கலாம் ஈ. மேற்கண்டவற்றில் எதுவுமில்லை

7. **கணக்கீட்டு ஆண்டு என்பது**
அ. ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை ஆ. மார்ச் 1 முதல் பிப்ரவரி 28 வரை
இ. சூலை 1 முதல் சூன் 30 வரை ஈ. சனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை

8. **அரசு நிறவனங்களின் முதன்மையான நோக்கம் என்பது**
அ. லாபம் ஈட்டுதல் ஆ. வேலை வாய்ப்பை உருவாக்குதல்
இ. மக்களுக்கு சேவை செய்தல் ஈ. மேற்கூறிய அனைத்தும்

9. **வங்கியர்கள் பணத்தை கையாள்பவர்கள் மட்டுமல்ல,--க்கு வழிகாட்டுபவராகவும் இருக்கிறார்கள்.**
அ. பொருளாதார வளர்ச்சி ஆ. வர்த்தக வளர்ச்சி
இ. தொழில் வளர்ச்சி ஈ. சேவை வளர்ச்சி

10. **பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக ------ பண்டகக்காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.**
அ. ஆவணம் ஆ. தனியார் இ. குளிர் பதன ஈ. கூட்டுறவு

11. **உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை நுகர்வோருக்கு எடுத்துச் செல்லும் செயலுக்கு ------ என பெயர்**
அ. போக்குவரத்து ஆ. பெயர்ச்சியில் இ. வழங்கல் முறை ஈ. சந்தையியல்

12. **பின்வருவனவற்றுள் எது ஊழியர்களின் சமூகப் பொறுப்புணர்வு ஆகாது.**
அ. நியாயமான ஊதியம் ஆ. சரியான வசதிகள் இ. சமூகப் பாதுகாப்பு ஈ.சுரண்டல்

13. **அமெரிக்க வைப்பு இரசீது வெளியிடப்படுவது**
அ. கனடா ஆ. சீனா இ. இந்தியா ஈ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

14. **சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் அளிக்க ------- வேறுபட்ட முறைகள் உள்ளன.**
அ. 1 ஆ. 2 இ. 3 ஈ. 4

15. **உள்நாட்டு வியாபாரத்தின் நோக்கம் -----**
அ. வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது
ஆ. அத்தியாவசியப் பொருட்களையும் சேவைகளையும் சிக்கன விலையில் வழங்குவது
இ. தேசிய வருமானத்தை உயர்த்துவது
ஈ. அனைத்துப் பொருட்களையும் கிடைக்கச் செய்தல்
16. **வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார்?**
அ. மொத்த வியாபாரி ஆ.உற்பத்தியாளர் இ.சில்லறை வியாபாரி ஈ.வாடிக்கையாளர்கள்
17. **நிரந்தர இடமின்றி வெவ்வேறு இடங்களுக்குச் சென்று குறைந்த விலையுள்ள பொருட்களை வியாபாரம் செய்வோரை --------- என்பர்**
அ. மடங்கு கடைகள் ஆ. முகவர்
இ. தெருக்கடை வியாபாரிகள் ஈ. சுற்றாடும் வியாபாரிகள்
18. **STC-யின் விரிவாக்கம்**
அ. மாநில பயிற்சி மையம் ஆ. மாநில பயிற்சி சபை
இ. மாநில வணிக மையம் ஈ. மாநில வணிக கழகம்
19. **அலுவல் சார்ந்த மூலதனம் என்பது**
அ. இந்திய ரிசர்வ் வங்கியின் அயல் நாட்டு நாணய மதிப்பு ஆ. அரசின் சிறப்பு எடுப்பு உரிமை
இ. அ மற்றும் ஆ இரண்டும் ஈ. அயல்நாட்டு மூலதனம்
20. **ஒப்பந்த மீறலுக்குக் கொடுக்கப்பட்ட இழப்பீடு**
அ. சேதம் ஆ. ஊதியம் இ. பணம் ஈ. காசோலை

**பகுதி – ஆ** **7x2=14**

**II.** **<u>ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30 கட்டாய வினா</u>**

21. வணிகத்தை வரையறுக்க.
22. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
23. கைப்பேசி வங்கியியல் என்றால் என்ன ?
24 போக்குவரத்து வரையறு
25. பண்டகக் காப்பகங்கள் என்றால் என்ன?
26. தடையற்ற நிறுவனம் என்றால் என்ன ?
27. அமெரிக்க வைப்பு இரசீது என்றால் என்ன ?
28. தானியங்கி விற்பனை எந்திரம் என்றால் என்ன ?
29. இருதரப்பு உடன்படிக்கை மூலம் விடுவிப்பின் வகைகள் யாவை ?
30. அ ஆ மற்றும இ என்ற மூவரும் கூட்டாளிகள். இதில் “அ” என்பவர் விலகிக் கொண்டாலும் “ஆ” மற்றும் “இ” ஆகிய இருவரும் கூட்டாண்மையைத் தொடர்ந்து நடத்துவதாக ஒப்புக் கொண்டால் அது அது என்ன வகையான கூட்டாண்மைக் கலைப்பாகும். விளக்குக.

**<u>பகுதி – இ</u>** **7x3=21**

**III.** **<u>ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40 கட்டாய வினா</u>**

31. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
32. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
33. இந்தியப் பன்னாட்டு நிறுவனங்கள் ஏதேனும் மூன்றைக் குறிப்பிடுக.
34. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம் பற்றிக் கூறுக.
35. காப்பீட்டின் வரைவிலக்கணம் தருக.
36. தனி உரிமையியலின் வகைகள் யாவை ?
37. கால அளவின் அடிப்படையில் தொழில் நிதியின் வகைகளை குறிப்பிடுக.
38. மடங்கு கடையின் குறைபாடுகள் யாவை ? (ஏதேனும் 3)
39. உலக வங்கி என்பதன் பொருள் யாது ?
40. ராஜா என்பவர் கோவிந்தன் என்பவருக்கு ₹ 10,000 தருவதாக ரவி என்பவரிடம் வாக்குறுதி அளிக்கிறார். ஆனால் ராஜா என்பவர் கோவிந்தன் என்பவருக்கு அத்தொகையை அளிக்க

தவறிவிட்டார். இங்கு அத்தொகையை அளிக்குமாறு ராஜாவிடம் கோர வேண்டியவர் யார் ? கோவிந்தனா? அல்லது ரவியா ? ஏன் ?

**பகுதி – ஈ**

IV. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 7x5=35

41. (அ) வணிகத்தின் தடைகளை விவரி ? (ஏதேனும் 5) அல்லது

(ஆ) பல்வேறு வகையான குறுகிய கால நிதி ஆதாரங்களை விளக்குக. (ஏதேனும் 5)

42. (அ) அரசு நிறுமங்களின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் 5 ) அல்லது

(ஆ) அந்நிய செலாவணி மாற்றுப் பத்திரத்தின் ஏதேனும் ஐந்து சிறப்பியல்புகளை விவரி.

43 (அ) வணிக வங்கிகளால் நிகழ்த்தப்படும் பல்வேறு வகையான முதன்மை செயல்பாடுகளைப் பற்றி விவாதிக்க. அல்லது

(ஆ) மொத்த வியாபாரியின் பணிகள் யாவை ? (ஏதேனும் 5)

44. (அ) துறைவாரி நிறுவனங்களின் நிறைகளை விவரி.(ஏதேனும் 5) அல்லது

(ஆ) காப்பீட்டின் வகைகளை விளக்குக. (ஏதேனும் 5)

45. (அ) பெரு நிறுவன ஆளுகையின் நன்மைகளை குறிப்பிடுக. ( ஏதேனும் 5) அல்லது

(ஆ) கூட்டாண்மை கலைப்பின் வகைகளை விவரி

46. (அ) சுய உதவிக் குழுக்களின் நோக்கங்களை விவரி (ஏதேனும் 5) அல்லது

(ஆ) கப்பல் இரசீதிற்கும் கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

47. (அ) சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகள் யாவை ? (ஏதேனும் 5)

(ஆ) வருமான வரியின் ஐந்து சிறப்புக்கூறுகளை விளக்கி எழுதுக.

★★★★★★★★★★★வாழ்த்துகள் ★★★★★★★★★★★



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

# நற்றமிழ் பதிப்பகம்

## எமது வெளியீடுகள் 2022-23

**12** — வணிகவியல் கையேடு
விலை ரூ. 60 மட்டுமே

**11** — வணிகவியல் &
கணக்குப்பதிவியல் கையேடு
விலை ரூ. 65 மட்டுமே

## அடுத்த வருட படைப்புகள் 2023 – 24

| வகுப்பு | பாடம் | வழி | விலை |
|---|---|---|---|
| 11 | வணிகவியல் & கணக்குப்பதிவியல் | தமிழ் | Soon |
| | | ஆங்கிலம் | Soon |
| 12 | வணிகவியல் & கணக்குப்பதிவியல் | தமிழ் | Soon |
| | | ஆங்கிலம் | Soon |
| 11 & 12 | கணக்குப்பதிவியல் வினா வங்கி | தமிழ் ஆங்கிலம் | Soon |

தொடர்புக்கு
நற்றமிழ் பதிப்பகம்
சேலம் – 636010
9488270034 – 8667445461

**To Follow us on Social Medias**

**You tube – G.P.Teach**

**Web Site – tamilkalvii.blogspot**

Prepared by G.Prakash.M.Com.M.Phil.B.Ed.D.Ted.9488270034

## நற்றமிழ் மாதிரி வினாத்தாள் – 3

**பாடம் – கணக்குப்பதிவியல் வகுப்பு – 12**

**காலம் – 3 மணி நேரம் மதிப்பெண் – 90**

### பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 20x1=20

1. **அர்த்தசாத்திரம் என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?**
   அ. கௌடில்யர் ஆ. வால்மிகி இ. திருவள்ளுவர் ஈ. இளங்கோவடிகள்
2. **அதிக அளவு அபாயத்தைக் கொண்டது**
   அ. உற்பத்தித் தொழில் ஆ. வணிகம்
   இ. வியாபாரம் ஈ. இவை அனைத்தும்
3. **தனியாள் வணிகத்தின் மிகப்பெரிய குறைபாடு**
   அ. வரையறு பொறுப்பு ஆ. வரையறாப் பொறுப்பு
   இ.அமைப்பெளிமை ஈ. விரைவான முடிவு
4. **இந்து கூட்டுக் குடும்பம் யாரால் நிர்வகிக்கப்படுகிறது.**
   அ. முதலாளி ஆ. கர்த்தா இ. மேலாளர் ஈ. கூட்டாளி
5. **நுகர்வோர் கூட்டுறவு ----- முதன் முதலாக வெற்றிபெற்றது**
   அ. இங்கிலாந்து ஆ. அமெரிக்கா இ. சுவிஸ் ஈ. இந்தியா
6. **ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் உள்ளது.**
   அ. மைய வங்கி ஆ. வணிக வங்கி
   இ. கூட்டுறவு வங்கிகள் ஈ. வெளிநாட்டு வங்கிகள்
7. **பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக ------ பண்டகக்காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.**
   அ. ஆவணம் ஆ. தனியார் இ. குளிர் பதன ஈ. கூட்டுறவு
8. **பின்வருவனவற்றில் எது காப்பீட்டின் பணி அல்ல**
   அ. கடன் நிதி அளிப்பு ஆ. இடர் பகிர்வு
   இ. மூலதன திரட்டுதல் உதவி ஈ. மட்டுப்படுத்துதல்
9. **பின்வருவனவற்றுள் எது ஊழியர்களின் சமூகப் பொறுப்புணர்வு ஆகாது.**
   அ. நியாயமான ஊதியம் ஆ. சரியான வசதிகள் இ. சமூகப் பாதுகாப்பு ஈ.சுரண்டல்
10. **கடன் பத்திரதாரர்கள் ஒரு நிலையான ---- விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்**
    அ. பங்காதாயம் ஆ. இலாபம் இ. வட்டி ஈ. இவை எதுவும் இல்லை
11. **அமெரிக்க வைப்பு இரசீது வெளியிடப்படுவது**
    அ. கனடா ஆ. சீனா இ. இந்தியா ஈ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்
12. **குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு**
    அ. 2004 ஆ. 2007 இ. 2006 ஈ.2008
13. **வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார்?**
    அ. மொத்த வியாபாரி ஆ.உற்பத்தியாளர் இ.சில்லறை வியாபாரி ஈ.வாடிக்கையாளர்கள்
14. **நிரந்தர இடமின்றி வெவ்வேறு இடங்களுக்குச் சென்று குறைந்த விலையுள்ள பொருட்களை வியாபாரம் செய்வோரை --------- என்பர்**
    அ. மடங்கு கடைகள் ஆ. முகவர்
    இ. தெருக்கடை வியாபாரிகள் ஈ. சுற்றாடும் வியாபாரிகள்
15. **STC-யின் விரிவாக்கம்**
    அ. மாநில பயிற்சி மையம் ஆ. மாநில பயிற்சி சபை
    இ. மாநில வணிக மையம் ஈ. மாநில வணிக கழகம்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

16. **ஒரு நாட்டில் குடியிருப்போருக்கும் மற்றொரு நாட்டில் குடியிருப்போருக்கும் இடையே நடைபெறும் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட அறிக்கை**
அ. செலுத்தல் சமநிலை இ. வாணிப சமநிலை
ஆ. பெறுதல் செலுத்தல் அறிக்கை ஈ. கணக்கியல் அறிக்கை

17. **ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும், உறுதிமொழிகளின் தொகுதியும்**
அ. உடன்பாடு ஆ. ஒப்பந்தம் இ. முனைவு ஈ. ஏற்பு

18. **மூன்றாம் நபர் என்று யாரை கூறுகின்றோம்?**
அ. வாக்குறுதி அளிப்பவர் ஆ. வாக்குறுதி பெறுபவர்
இ. முகவர் ஈ. சட்டரீதியான பிரதிநிதி

19 **வருமானவரி என்பது**
அ. வியாபார வரி ஆ. நேரடி வரி இ. மறைமுக வரி ஈ. சேவை வரி

20. **இருதரப்பு ஒப்பந்தம் மூலம் விடுவிக்கப்படுவது**
அ. பரிமாற்றம் ஆ. ரத்து செய்தல
இ. திருத்தம் ஈ. மேலே கூறுப்பட்டுள்ள அனைத்தும்

**பகுதி – ஆ** **7x2=14**

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30 கட்டாய வினா**

21. கர்த்தா என்பவர் யார் ?
22. பொது கழகங்களுக்கு இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடுக.
23. பற்று அட்டை சிறு குறிப்பு வரைக.
24. பெயர்ச்சியல் என்றால் என்ன ?
25. உலகளாவிய வைப்பு இரசீது என்றால் என்ன ?
26. தரகர் என்பவர் யார்?
27. செலுத்து சமநிலை என்றால் என்ன ?
28. சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?
29. பண்டக காப்பகங்களின் இரண்டு பணிகள் குறிப்பிடுக.
30. ஒப்பந்தம் என்றால் என்ன ?

**பகுதி – இ** **7x3=21**

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40 கட்டாய வினா**

31. சிறு குறிப்பு வரைக அ. தொழில் ஆ. சிறப்பு தொழில்
32. கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது ?
33. அயல்நாட்டு நிறுமம் என்றால் என்ன?
34. மின்னணு வங்கியியல் என்றால் என்ன?
35. கப்பல் வாடகை ஒப்பாவணம் என்றால் என்ன ?
36. அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரம் என்றால் என்ன ?
37. மொத்த வியாபாரிகளின் பண்புநலன்கள் ஏதேனும் மூன்றினை எழுது?
38. முனைவு என்றால் என்ன ?
39. நபர் என்ற சொல்லில் யாரெல்லாம் அடங்குவர் ?
40. பண்டகக் காப்பாளர் இரசீது - லிருந்து பண்டக சான்றாணை வேறுப்படுத்துக.

## பகுதி – ஈ

IV. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 7x5=35

41அ. தொழிலின் ஏதேனும் 5 நோக்கங்களை விவரி. (அல்லது)

ஆ. உளகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

42அ. தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி. ( ஏதேனும் 5 ) ( அல்லது )

ஆ. உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் வேறுபாடுகள் யாவை?

43அ. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (அல்லது)

ஆ. சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.

44அ. பன்னாட்டு நிறுமத்தின் நன்மைகளை விவரி. (அல்லது)

ஆ. ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.

45அ. பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை? (ஏதேனும் 5) (அல்லது)

ஆ. வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரி?

46அ. போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரி. (ஏதேனும் 5) (அல்லது)

ஆ. சில்லறை வியாபாரியின் வகைகளை விவரி ? (ஏதேனும் 5)

47அ. வாணிபச் சமநிலையின் சிறப்புக் கூறுகளை விளக்குக. (அல்லது)

ஆ. கூட்டுறவின் கொள்கைகள் என்ன ?

★★★★★★★★★★வாழ்த்துகள் ★★★★★★★★★★

**நற்றமிழ் மாதிரி வினாத்தாள் – 4**

**பாடம் – கணக்குப்பதிவியல்** **வகுப்பு – 12**

**காலம் – 3 மணி நேரம்** **மதிப்பெண் – 90**

**பகுதி – அ**

I. **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 20x1=20

1. **_______முதன் முதலில் சுல்தானாக இருந்தார். அடர்ந்த வனப்பகுதிகளில் பாதை உருவாக்கி வியாபாரம் செய்ய வழி வகுத்தார்.**
அ. பால்பன் ஆ. வாஸ்கோடகாமா இ. அக்பர் ஈ. அலாவுதீன் கில்ஜி

2. **அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்**
அ. பொருளாதாரச் செயல்பாடுகள் ஆ. பண நடவடிக்கைகள்
இ. பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் ஈ. நிதி நடவடிக்கைகள்

3. **இந்துக் கூட்டுக் குடும்பத் தொழிலில் உறுப்பினர்களை எவ்வாறு அழைப்பாய்?**
அ. கர்த்தா ஆ. கூட்டு வாரிசுதாரர் இ. தலைமுறை ஈ. கூட்டாளிகள்

4. **நிறுமத்தின் இயக்குநரை கீழ்க்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?**
அ. கடனீந்தோர் ஆ. கடனாளர் இ. கடனீட்டு பத்திரதாரர் ஈ.பங்குதாரர்கள்

5. **ராக்டேல் சொசையிட்டி தோற்றுவித்தவர்**
அ. ராபர்ட் ஓவென் ஆ. H.C.கால்வெர்ட் இ. டால்மாக்கி ஈ. லம்பேர்ட்

6. **ஒரு அரசாங்க நிறுவனம் எவர் பெயரில் பங்குகளை வாங்குகிறது?**
அ. பிரதமர் ஆ. குடியரசுத் தலைவர்
இ. இந்தியத் தலைமை நீதிபதி ஈ. மாநில முதலமைச்சர்

7. **இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1,----- ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.**
அ. 1936 ஆ.1935 இ. 1934 ஈ. 1933

8. **பண்டகக் காப்பகம் --------தடையை நீக்குகிறது.**
அ. ஆள்சார் ஆ. காலத்தடை இ.இடர்ப்பாட்டு தடை ஈ. அறிவுத்தடை

9. **வான்வழி அனுப்பீட்டு ரசீது ------ அசல் பாகங்களில் தயாரிக்கப்படுகிறது.**
அ. ஒன்று ஆ. இரண்டு இ. மூன்று ஈ. நான்கு

10. **பின்வருவனவற்றுள் எது கடல்சார் காப்பீடு வகையினைச் சார்ந்தது?**
அ. பணம் திருப்பத் திட்டாவணம் ஆ. பொருள் சார் காப்பீடு
இ. கப்பல் சார் காப்பீடு ஈ. ஆ மற்றும் இ

11. **சமூகப் பொறுப்புணர்வு தொழில் நிறுவனங்களின் பங்குதாரர்களை தவிர -----க்கும் உண்டு**
அ. பங்குதாரர்கள் ஆ. பணியாளர்கள் இ. அரசு ஈ. நிறுவனம்

12. **நேர்மை பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின் -------**
அ. கடனீந்தோர் ஆ. உரிமையாளர்கள் இ.கடனாளிகள் ஈ.இவைஎதுவும்இல்லை

13. **சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் அளிக்க ------- வேறுபட்ட முறைகள் உள்ளன.**
அ. 1 ஆ. 2 இ. 3 ஈ. 4

14. **மீண்டும் ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இறக்குமதி செய்வது**
அ. வெளிநாட்டு வியாபாரம் ஆ. உள்நாட்டு வியாபாரம்
இ. மறு ஏற்றுமதி வியாபாரம் ஈ. வியாபாரம்

15. **சில்லறை வியாபாரிகள் --------- அளவில் பொருட்களை வைத்திருப்பர்.**
அ. சிறிய ஆ. பெரிய இ. நடுத்தர ஈ. அளவான

16. **கப்பல் தலைவரால் சரக்கு பெற்றுக்கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் இரசீது**
அ. அனுப்புகை இரசீது ஆ. கப்பல் இரசீது
இ. கப்பல் துணைத்தலைவர் இரசீது ஈ. வாணிகத்தூதுவர் இரசீது

**17. உலக வர்த்தக அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம்**
அ. நியூயார்க் ஆ. இலண்டன் இ. ஜெனிவா ஈ. பிரேசில்

18. **சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை**
அ. நிறைவேற்றக்கூடிய ஏற்பு ஆ. ஏற்றுக்கொள்ளப்பட்ட முனைவு
இ. ஒப்புக்கொண்ட வாக்குறுதி ஈ. ஒப்பந்தம்

19. **இவர்களில் யார் வாக்குறுதியின் நிறைவேற்றத்தைக் கோர முடியாது?**
அ. வாக்குறுதி பெறுபவர்
ஆ. கூட்டு வாக்குறுதி அளித்தவர்கள்
இ. ஒரு வாக்குறுதி பெறுபவர் மரணத்தின் போது, அவரது சட்ட பிரதிநிதி
ஈ. ஒப்பந்தத்திற்கு மூன்றாம் நபர்

**20. சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்**
அ. ஏப்ரல் 1, 2017 ஆ. சனவரி 1, 2017 இ. சூலை 1, 2017 ஈ. மார்ச் 1, 2017

**பகுதி – ஆ** **7x2=14**

**II. <u>ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30 கட்டாய வினா</u>**

21. நாளங்காடி என்றால் என்ன?
22. இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள் யாவை?
23. பன்னாட்டு நிறுமத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.
24. தானியங்கி பணம் வழங்கும் அட்டை பற்றி நீவிர் அறிவது யாது?
25. வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன ?
26. உள்நாட்டு வியாபாரம் என்றால் என்ன?
27. மதிப்பீட்டு ஆண்டு என்றால் என்ன ?
28. வரையறு பொறுப்பு என்றால் என்ன?
29. கடன் கூட்டுறவு விளக்குக?
30. சில்லறை வியாபாரி வரைவிலக்கணம் தருக.

**<u>பகுதி – இ</u>** **7x3=21**

**III. <u>ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40 கட்டாய வினா</u>**

31. சேவைத் தொழில்கள் என்றால் என்ன?
32. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
33. கூட்டுறவுகளின் குறைபாடுகளை விவரி ( எவையேனும் மூன்று)
34. உண்மை நேர மொத்தத் தீர்வக அமைப்பு பற்றி குறிப்பு வரைக. (RTGS)
35. பயிர்க் காப்பீட்டின் பொருள் தருக.
36. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக? (ஏதேனும் 3 )
37. குறிப்பு வரைக அ) நேரடி வரி அ) மறைமுக வரிகள்
38. சரக்கு மற்றும் சேவை வரி குறைபாடுகள் மூன்றினை எழுதுக.
39. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் யாவை ? (ஏதேனும் 3 )
40. செல்லாத ஒப்பந்தம் என்றால் என்ன ?

**பகுதி – ஈ**

IV. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 7x5=35

41அ. சிறு குறிப்பு வரைக.

அ) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்

ஆ) மரபுசார் உற்பத்தித் தொழில்

இ) கட்டுமானத் தொழில் (அல்லது)

ஆ. ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

42அ. தனியாள் வணிகத்தின் குறைபாடுகளை விவரி? (ஏதேனும் 5) (அல்லது)

ஆ. துறைவாரிப் பண்டகசாலை சிறப்பியல்புகளை விவரி.

43அ. பொதுக் கழகத்தின் இயல்புகள் யாவை ? (ஏதேனும் 5) (அல்லது)

ஆ. சில்லறை வியாபாரிகளின் பண்புநலன்கள் யாவை?

44 அ. கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி ? (அ)

ஆ. தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகளை விளக்குக.

45அ. செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5) (அல்லது)

ஆ. செலுத்தல் சமநிலைக்கும் வாணிபச் சமநிலைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

46அ. கூட்டுறவுச் சங்கத்தின் நன்மைகள் யாவை? (ஏதேனும் 5) ( அல்லது )

ஆ. புற ஒப்படைப்பின் நன்மைகளை விவரிக்க.

47அ. வணிக வங்கிகளின் பல்வேறு வகையான இரண்டாம் நிலை செயல்பாடுகளை விளக்குக.(ஏதேனும் 5) (அல்லது)

ஆ. ஐவகை வருமானத் தலைப்புகளை வரிசைப்படுத்துக ?

★★★★★★★★★★★★வாழ்த்துகள் ★★★★★★★★★★★



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

# நற்றமிழ் பதிப்பகம்

## எமது வெளியீடுகள் 2022-23

**12** — வணிகவியல் கையேடு
விலை ரூ. 60 மட்டுமே

**11** — வணிகவியல் &
கணக்குப்பதிவியல் கையேடு
விலை ரூ. 65 மட்டுமே

### அடுத்த வருட படைப்புகள் 2023 – 24

| வகுப்பு | பாடம் | வழி | விலை |
|---|---|---|---|
| 11 | வணிகவியல் & கணக்குப்பதிவியல் | தமிழ் | Soon |
| | | ஆங்கிலம் | Soon |
| 12 | வணிகவியல் & கணக்குப்பதிவியல் | தமிழ் | Soon |
| | | ஆங்கிலம் | Soon |
| 11 & 12 | கணக்குப்பதிவியல் வினா வங்கி | தமிழ் ஆங்கிலம் | Soon |

தொடர்புக்கு
நற்றமிழ் பதிப்பகம்
சேலம் – 636010
9488270034 – 8667445461

**To Follow us on Social Medias**

**You tube – G.P.Teach**

**Web Site – tamilkalvii.blogspot**

## நற்றமிழ் மாதிரி வினாத்தாள் – 5

பாடம் – கணக்குப்பதிவியல் வகுப்பு – 12
காலம் – 3 மணி நேரம் மதிப்பெண் – 90

### பகுதி – அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20x1=20

1. தொழிலின் முதன்மைக் குறிக்கோள் ____________
அ. இலாபம் ஈட்டுதல் ஆ. இலாபம் ஈட்டாமல் இருத்தல்
இ. சிறப்புத் தேர்ச்சி ஈ. மேற்கூறிய எதுவுமில்லை

2. ஒரு முழுப்பொருள் தயாரிக்கப் பல நிலைகளைக் கடக்கும் உற்பத்தி முறை என்பது
அ. பகுப்பாய்வு உற்பத்தித் தொழில் ஆ. செயற்கை பொருள் உற்பத்தித் தொழில்
இ. தொடர்முறை உற்பத்தித் தொழில் ஈ. ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்

3. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று தொழில் அமைப்பு இல்லாதது?
அ. கூட்டுப்பங்கு நிறுமம் ஆ. தனியாள் வணிகம்
இ. அரசு நிறுமம் ஈ. கூட்டுறவு

4. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது
அ. ஒப்பந்தத்தால் ஆ. கூட்டாளிகளிடையே உறவு
இ. அரசின் வழிகாட்டல் ஈ. நட்பின் அடிப்படையில்

5. கூட்டுறவு தோல்வியடைவதற்கான காரணம்
அ. வரம்பற்ற உறுப்பினர் ஆ. ரொக்க வியாபாரம்
இ. தவறான நிர்வாகம் ஈ. இழப்பு ஏற்படுவதால்

6. பன்னாட்டு நிறுமங்கள் பின்வருவனவற்றில் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன.
அ. கிளைகள் ஆ. அதன் துணை நிறுவனங்கள்
இ. தலைமையகம் ஈ.நாடாளுமன்றம்

7. பொதுத்துறை நிறுவனத்தின் மிகப்பழமையான அமைப்பு
அ. பொதுத்துறை நிறுவனம் ஆ. துறைவாரி அமைப்பு
இ. பன்னாட்டு நிறுவனம் ஈ. சட்டமுறை நிறுவனம்

8. கீழ்க்கண்டவற்றில் எது தொழிற்துறை வங்கி அல்ல?
அ. ICICI ஆ. HSBC இ.SIDBI ஈ. IDBI

9. எந்த ஒரு வகையான சேவைகள் வணிக வங்கியால் வழங்கப்படுவதில்லை
அ. வணிகத் தகவலைச் சேகரித்தல் மற்றும் அளித்தல்
ஆ. வங்கி மேல்வரைப்பற்று
இ. ரொக்கக்கடன்
ஈ. உண்டியல்களைத் தள்ளுபடி செய்தல்

10. ----- வங்கியில் இருந்து நிதியுதவி பெறுவதற்காக இணைப்பாக வழங்கப்பட்டது
அ. துறைமுகச் சான்றாணை ஆ. பண்டகக்காப்பாளர் இரசீது
இ. துறைமுக இரசீது ஈ. பண்டக சான்றாணை

11. காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடு
அ. மிக்க நம்பிக்கை ஆ. கூட்டுறவு இ. பகர உரிமை ஈ. அண்மைக்காரணம்

12. எந்த ஒரு தொடர்ச்சியான உறவு வணிகத்திற்கான உரிமத்தை வழங்குகிறது. பயிற்சி அளிக்கிறது. கிளை விற்பனை செய்வதை கருத்தில் கொள்வது --என அழைக்கப்படுகிறது.
அ. தனி உரிமையியல் ஆ. ஏட்டுக்கடன் முகமை
இ. அளிப்புத் தொடர் மேலாண்மை ஈ. பரிமாற்றம்

13. அயல்நாட்டு பத்திர வெளியீட்டு உரிமை தரும் ஆவணம்
அ. உரிமை சான்றிதழ் ஆ. வைப்பு இரசீது
இ. உரிமை இரசீது ஈ. மாற்றுப் பத்திரம்

**14. தலைமை நிர்வாகத்தின் பங்கு என்பது, அதன் முழு அமைப்பு எதை நோக்கி வழி நடத்த வேண்டும்**

அ. பொது நடத்தை ஆ. அமைப்பு நடத்தை
இ. நேர்மையான நன்னெறி நடத்தை ஈ. தனிநபர் நடத்தை

**15. உள்நாட்டு வியாபாரத்தின் நோக்கம் -----**

அ. வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது
ஆ. அத்தியாவசியப் பொருட்களையும் சேவைகளையும் சிக்கன விலையில் வழங்குவது
இ. தேசிய வருமானத்தை உயர்த்துவது
ஈ. அனைத்துப் பொருட்களையும் கிடைக்கச் செய்தல்

**16. சிற்றளவு நிலையிட சில்லறை வியாபாரி என்பதனுள் ------ அடங்குவர்**

அ. இடம் பெயர் வியாபாரிகள் ஆ. சுமை தூக்கும் வியாபாரிகள்
இ. பொதுப் பண்டகச் சாலைகள் ஈ. வாகனத்தில் விற்போர்

**17. ஏற்றுமதியாளரால் சுங்க நடைமுறைகளைப் பின்பற்ற நியமிக்கப்படும் முகவர்**

அ. அகற்றீட்டு முகவர் ஆ. அனுப்புகை முகவர்
இ. கழிவு முகவர் ஈ. தன்பொறுப்பு முகவர்

**18. செலுத்து சம நிலையின் உபரி வெளிக்காட்டுவது**

அ. ஏற்றுமதி இறக்குமதியை விட அதிகமாக இருத்தல்
ஆ. இறக்குமதி ஏற்றுமதி இரண்டும் சமமாக இருத்தல்
இ. இறக்குமதி ஏற்றுமதி இரண்டும் சம நிலைக்கு அதிகமாக இருத்தல்
ஈ. இவையனைத்தும்

**19. A,B,C கூட்டு ஒப்பந்தத்தின்படி ரூ.50,000 D என்பவருக்கு செலுத்த வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதை நிறைவேற்றுவதற்கு முன், C இறந்து விடுகிறார். இங்கே, ஒப்பந்தம்**

அ. C-யின் மரணத்தினால் ஒப்பந்தம் செல்லாது
ஆ. C சட்ட பிரதிநிதிகளுடன் சேர்த்து A மற்றும் B ஆகியோரால் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்
இ. A மற்றும் B மட்டும் தனியாக நிறைவேற்றப்பட வேண்டும்.
ஈ. A,B மற்றும் Dக்கு இடையே ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும்

**20. ஐந்து தலைப்புகளின் கீழ் வரும் வருமானத்தின் கூடுதல் என்பது**

அ. முழுமொத்த வருமானம் ஆ. மொத்த வருமானம்
இ. ஊதிய வருமானம் ஈ. வியாபார வருமானம்

**பகுதி – ஆ** 7x2=14

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30 கட்டாய வினா**

21. அல்லங்காடி என்றால் என்ன?
22. உறங்கும் கூட்டாளி என்பவர் யார்?
23. கூட்டுறவு வரையறு.
24. கடன் அட்டை - குறிப்பு வரைக.
25. சுய உதவிக் குழு என்றால் என்ன ?
26. இடைநிலையர் என்பவர் யார்?
27. சரக்காணை என்றால் என்ன ?
28. வைப்பு இரசீது என்றால் என்ன?
29. முந்தைய ஆண்டு என்றால் என்ன?
30. ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?

பகுதி – இ 7x3=21

III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40 கட்டாய வினா

31. வணிகம் பொருள் தருக.

32. போக்குவரத்து - சிறு குறிப்பு வரைக.

33. இந்து கூட்டுக் குடும்பத் தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றை விவரி?

34. நிறுமத்தின் ஏதேனும் மூன்று நன்மைகளை விவரி

35. துறைவாரி நிறுவனம் என்றால் என்ன ?

36. வணிக முகவர்களின் வகைகள் யாவை?

37. சார்க் அமைப்பின் பணிகள் யாவை ?

38. பன்னாட்டு நிறுமத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகளை விவரி.

39. சிறப்புப் பண்டகச் சாலைகள் என்றால் என்ன? (மார்ச் 2019 )

40. உலக வர்த்தக அமைப்பு என்றால் என்ன ?

பகுதி – ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 7x5=35

41அ. பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாகக் கூறப்பட்டுள்ளன யாவை ? (அ)

ஆ. தொழிலின் ஏதேனும் ஐந்து நோக்கங்களை விவரி

42அ. உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் - ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5) (அ)

ஆ. கூட்டாண்மைக் கலைப்பின் வகைகளை விவரி

43அ. கூட்டுறவுச் சங்கத்தின் நன்மைகள் யாவை ? (அ)

ஆ. துறைவாரி நிறுவனங்களின் நன்மைகள் மற்றும் குறைபாடுகளை விவரி

44அ. இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக. (அ)

ஆ. தொழில் நெறிமுறைகளின் பல்வேறு முக்கிய கூறுகளை விவரி

45அ. செலுத்துதல் சமநிலையின் சிறப்பம்சங்கள் யாவை ? (அ)

ஆ. உலக வர்த்தக அமைப்பின் நோக்கங்கள் யாவை ?

46அ. இறக்குமதி வணிகத்தின் நோக்கங்கள் யாவை ? (அ)

ஆ. பண்டகக் காப்பகத்தின் நன்மைகளை விவரி

47அ. வணிகத்தின் பல்வேறு தடைகளை விவரி (ஏதேனும் 5) (அ)

ஆ. நேரடி வரிக்கும் மறைமுக வரிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தருக.

★★★★★★★★★★வாழ்த்துகள் ★★★★★★★★★★

LET'S MAKE EDUCATION EASY

NP

NATRAMIL PUBLICATIONS , SALEM

www.Padasalai.Net



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

# நற்றமிழ் பதிப்பகம்

## எமது வெளியீடுகள் 2022-23

**12** — வணிகவியல் கையேடு
விலை ரூ. 60 மட்டுமே

**11** — வணிகவியல் &
கணக்குப்பதிவியல் கையேடு
விலை ரூ. 65 மட்டுமே

## அடுத்த வருட படைப்புகள் 2023 – 24

| வகுப்பு | பாடம் | வழி | விலை |
|---|---|---|---|
| 11 | வணிகவியல் & கணக்குப்பதிவியல் | தமிழ் | Soon |
| | | ஆங்கிலம் | Soon |
| 12 | வணிகவியல் & கணக்குப்பதிவியல் | தமிழ் | Soon |
| | | ஆங்கிலம் | Soon |
| 11 & 12 | கணக்குப்பதிவியல் வினா வங்கி | தமிழ் ஆங்கிலம் | Soon |

தொடர்புக்கு
நற்றமிழ் பதிப்பகம்
சேலம் – 636010
9488270034 – 8667445461

**To Follow us on Social Medias**

**You tube – G.P.Teach**

**Web Site – tamilkalvii.blogspot**

Prepared by G.Prakash.M.Com.M.Phil.B.Ed.D.Ted.9488270034